**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 183 /2021 PW1**

01.03.2024 **வா.சா.1 திரு. காயத்திரி சத்திய வாக்குமூலத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை -**

நான் பியூட்டிஷியன் வேலை செய்கிறேன். எனது அப்பா கார் டிரைவர் ஆவார். எனது அப்பா சொந்தமாக கார் வைத்து ஓட்டிவந்தார் கடந்த 2003ல் எனது அப்பா இறந்து விட்டார். எனது அப்பா இறந்த போது எனக்கு வயது சுமார் 17 இருக்கும். அப்போது நான் படித்துக் கொண்டு இருந்தேனா என்றால் இல்லை. நான் 10 வகுப்பு வரை படித்துள்ளேன். எனது அப்பா இறப்பிற்கு பிறகு எனது அண்ணன், அம்மா தான் குடும்பச் செலவுகளை பார்த்துக் கொண்டு நிர்வகித்துக் கொண்டு இருந்தார்கள். எனது அப்பா இறந்த போது எனது அண்ணனுக்கு வயது சுமார் 20 வயதிருக்கும். அப்போது எனது அண்ணன் எலக்ட்ரிக் கடையில் வேலை செய்து வந்தார். எனது அம்மா சூப்பர் மார்க்கெட்டில் வேலை செய்து பின்னர் சிங்கப்பூருக்கு சென்றார். சிங்கப்பூரில் சுமார் 1 1/2 ஆண்டுகள் வேலை செய்தார். சிங்கப்பூரில் இருந்து வந்த பிறகு மீண்டும் சூப்பர் மாக்கெட்டில் வேலை செய்தார். நான் திருவண்ணாமலையில் இதற்கு முன்பு இருந்த வீடு வாடகை வீடா, சொந்த வீடா என்றால் வாடகை வீடு. வாடகை ரூ. 4000/- ஆகும். தற்போது குடியிருக்கும் வீடு சொந்த வீடு அதனை 2011ல் கட்டினோம். வீட்டு மனை 1000 சதுரடி கொண்டதாகும். தரைத்தளம், முதல்தளம் கொண்ட வீடாகும். இரண்டு தளத்திலும் நாங்கள் தான் வசிக்கிறோம். அந்த மனை என்னுடைய பெயரில் தான் உள்ளது. 2011ல் அந்த மனை வாங்கப்பட்டதாகும். ரூ. 4 லட்சத்திற்க அந்த மனை வாங்கப்பட்டது. அப்போது வீடு கட்டுவதற்கு சுமார் 12 லட்சம் செலவானது. எனது கணவர் போலீசாக வேலை செய்கிறார். எனக்கு திருமணம் 2009ல் நடந்தது. பிரதிவாதியை கோயிலுக்கு செல்வதன் மூலம் எனக்கு பழக்கம். சுமார் 10 ஆண்டுகாலமாக எனக்கு பழக்கம். பிரதிவாதியின் கணவர் பெயர் என்ன என்று கேட்டால் ராஜேஷா, ரமேஷா என்று சரியாக தெரியவில்லை. தற்போது சாட்சி ரமேஷ் என்று கூறுகின்றார். வழக்கில் பிரதிவாதி அவரது கணவர் செய்யும் தொழிலில் பங்குதாரராக இருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எந்த வகையில் பங்குதாரர் என்று கேட்டால் அவரது

கணவர் செய்யும் தொழிலில் எல்லாவகையிலும் உதவியாக இருந்ததைத்தான் பங்குதாரர் என்று சொல்கிறேன். எந்தெந்த நிறுவனத்தில் பிரதிவாதி உதவியாளராக இருந்தார் என்று நான் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவர் உதவியாக இருந்தார் என்பதை காட்ட ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தற்போது சாட்சி நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சாட்சியம் அளிக்கிறார். நான் முன்னுக்கு பின் முரனாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எந்த நிறுவனத்தில் என்னை சேரச்சொல்லி மகேஸ்வரி வற்புறுத்தினார் என்றால் வற்புறுத்தவில்லை. கிரானைட் பிசினஸ்க்காவும், தியேட்டரை நடத்த வேண்டும் என்பதற்காகவும் மகேஸ்வரி என்னிடம் பணம் கேட்டார். அந்த கிரானைட் நிறுவனத்தின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. தியேட்டர் பெயர் வி.பி.சி ஆகும். அந்த தியேட்டர் அவரது கணவர் பெயரில் உள்ளது. எனது வழக்குரையில் முதல் பக்கத்தில் முதல் பாராவில் பிரதிவாதி கடன் கேட்கும்போது குடும்ப தொழில் விருத்திக்காக கேட்டதாக கூறிவிட்டு பின்னர் பணத்தை வாங்கும்போது குடும்ப செலவிற்காகவும், பழைய கடன்களை தீர்ப்பதற்கான அவசர தேவைக்காவும், குடும்ப தொழில் விருத்திக்காவும் கடன் வாங்கினார் என்று முன்னுக்கு பின் முரனாக மாற்றி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது நிருபண வாக்குமூலத்தில் முதல் பக்கம் பாரா 1ல் எனவே இந்த பிரதிவாதி அவர் தன் குடும்ப தேவைக்காகவும், வியாபார அபிவிருத்திக்காகவும், அவசர தேவைக்காவும் 6.1.2021ந் தேதி ரூ. 50 லட்சம் கடனாக பெற்றார் என்று வழக்குரைக்கு முரனாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி அவரது கடனை தீர்க்கும் பொருட்டு என்னிடம் பணம் பெற்றதாக சொல்லவில்லை. பிரதிவாதி எந்த நிறுவனத்திலும், உரிமையாளராகவோ, பங்குதாரராகவோ இல்லாத காரணத்தால் அவர் வாங்கிய கடனை அந்த நிறுவனத்தில் இருந்து வசூலிக்க முடியாது என்றால் சரியல்ல. நான் மாதம் 1 சதவீத வட்டி என குறிப்பிட்டுள்ளேன். அப்படி என்றால் மாதம் ரூ. 50 ஆயிரம் வட்டி வரும் என்றால் சரிதான். அந்த வட்டியை பிரதிவாதியிடம் கொடுக்கச் சொல்லி கேட்டேனா என்றால் இல்லை. கடன் கொடுத்த தேதியில் இருந்து, வழக்கு தாக்கல் செய்த தேதி வரையில் பிரதிவாதியிடம் வட்டி கொடுக்கச்சொல்லி கேட்டேனா என்றால் இல்லை. கடனை நான் திருப்பி கேட்டதை நான் நிருபிக்கும் பொருட்டு நான் ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கறிஞர் அறிவிப்பு ஏதும் பிரதிவாதிக்கு பணத்தை திருப்பி தரச்சொல்லி கேட்டு

அனுப்பினேனா என்றால் இல்லை. வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பாததற்கு ஏதேனும் காரணம் உள்ளதா என கேட்டால் அவர் போன் போட்டபோதும், நேரடியாக சென்று கேட்டபோதும் முறையான பதில் இல்லாததால் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுக்கவில்லை. நான் பிரதிவாதியின் மீது இது குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. பிரதிவாதி முறையான பதில் தராததால் அவரது சொத்தை ஐப்தி செய்ய வேண்டும் என்ற நோக்கில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன். வாங்கிய கடனை திருப்பி கேட்ட போது முறையாக பதில் தாரததால் தான் சொத்தை ஐப்தி செய்ய வேண்டும் என்ற நோக்கில் வழக்கை தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி பெயரில் என்ன சொத்துக்கள் உள்ளது என்றால் மில்லில் அவருக்கு பங்கு உள்ளது, அதேபோல் தியேட்டரில் பங்கு உள்ளது. ஆனால் பங்கு உள்ளதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அவர் பெயரில் சொத்து இருப்பதற்காக ஆதாரமே இல்லாமல் சொத்தை ஐப்தி செய்ய வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அவருக்கு சொத்து உள்ளது. கடன் கேட்ட தேதி எனக்கு நியாபகம் இல்லை. மகேஸ்வரியின் கணவரை நான் பார்த்துள்ளேன். மகேஸ்வரியின் கணவரை 10 ஆண்டுகளாக தெரியும். பிரதிவாதியின் கணவர் பிறந்த தேதி ஜனவரி 6 என்றால் சரிதான். பிரதிவாதியின் கணவர் 16.5.2021ல் இறந்தார். நான் சொல்லும் சொத்துக்கள் பிரதிவாதியின் கணவரின் குடும்ப சொத்துக்கள் என்றும், பிரதிவாதியின் கணவர் இறந்த பிறகு தான் வாரிசு என்ற அடிப்படையில் அந்த சொத்தில் பிரதிவாதிக்கு பங்கு கிடைக்கும் என்று சொன்னால் சரிதான். நான் வங்கியில் கடன் வாங்கும் போது என்னென்ன ஆவணங்கள் கொடுத்தேன் என்றால் வீட்டின் பத்திரம், ப்ளூ பிரிண்ட் ஆகியவற்றை கொடுத்தோம். எனது கணவரின் வருமாண ஆவணங்களையும் அதனுடன் சேர்த்து தாக்கல் செய்தேன். கடன் வாங்குவதற்கு கடன் வாங்குபவரின் வருமான ஆவணங்கள் முக்கியம் என்பது எனக்கு தெரியும் என்றால் சரிதான். ரூ. 50 லட்சம் கடன் கொடுத்த நான் பிரதிவாதியிடம் இருந்து வருவாய் ஆவணங்கள் மற்றும் சொத்து பத்திரங்களை வாங்கியிருக்க வேண்டுமா, இல்லையா என்றால் நான் வாங்கவில்லை. நான் பயன்படுத்தும் கார் எனது கணவரின் காராகும். அந்த காரின் பதிவு எண் எனக்கு நியாபகம் இல்லை. அந்த கார் மகேந்திரா கார் ஆகும். காரின் பதிவு எண் டி.என்.25 பி.எப். 8431 என்று சொன்னால் எனக்கு எண் நியாபகம் இல்லை ஆனால் காரின் நிறம் கிரே கலர் ஆகும். மகேந்திரா பைனான்சில் லோனில் வாங்கிய கார் என்றால் சரிதான். அந்த காருக்கு மாதம் எவ்வளவு இ.எம்.ஐ

கட்டுகிறோம் என்றால் நியாபகம் இல்லை. எந்த வருடம் வாங்கிய கார் என்று நியாபகம் இல்லை. எனது அண்ணன் தான் அந்த காருக்கான மாத தவணையை கட்டுகிறார். அந்த கார் 2.4.2018ல் வாங்கப்பட்டது என்றால் நியாபகம் இல்லை. எனது அண்ணனின் வங்கிக் கணக்கில் இருந்து தான் அந்த தவணை கட்டடப்படுகிறதா என்றால் தெரியவில்லை. அந்த கார் என் அண்ணன் பெயரில் உள்ளது. எனது பெயரில் ஏன் கார் வாங்கவில்லை என்றால் என் அண்ணன் பெயரில் கார் வாங்க விரும்பியதால் அவர் வாங்கினார். வா.சா.ஆ.3 கடனை பைசல் செய்ததற்கான ரசீதின் சான்றிட்ட நகல். இந்தியன் வங்கியில் பைசல் செய்யப்பட்டது. பைசல் செய்த தொகை நியாபகம் இல்லை. வா.சா.ஆ.3 2.7.2020ல் இந்தியன் வங்கியில் நான் வாங்கிய கடன் ரூ.11 லட்சத்தை பைசல் செய்ததற்கான ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.3ன் கடைசி பக்கத்தில் இந்தியன் வங்கி சார்பதிவாளருக்கு கொடுத்துள்ள கடிதத்தில் இந்த கடன் பி. பரந்தாமன், காயத்திரி வாங்கிய கடன் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். கடனை நானும், என் கணவரும் சேர்ந்து தான் வாங்கியுள்ளோம் என்றால் சரிதான். (**உணவு இடைவேளைக்காக குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.** )

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி** -

பிரதிவாதியின் கொரோனாவால் இறந்தார் என்றால் சரிதான். இறப்பதற்கு முன்பு சென்னையில் நீரிழிவு நோயிற்காக சிகிச்சை பெற்று வந்தார் என்றால் அது பற்றி தெரியாது. ஆனால் அவருக்கு சர்க்கரை நோய் இருந்ததாக கேள்வி பட்டேன். கோவிட் காலக்கட்டத்தில் பொதுவாக தொழில், நிறுவனங்கள் நடத்துபவர்கள் நொடிப்பு நிலையில் இருந்தார்கள் என்றால் அந்த அளவிற்கு கிடையாது. பியூட்டி பார்லர் மூலம் மாதம் நான் ரூ. 10 ஆயிரம் முதல் ரூ. 20 ஆயிரம் வரை சம்பாதித்து வருகிறேன். என் வங்கி கணக்கு எண் நியாபகம் இல்லை. ஆனால் கனரா வங்கியில் எனக்கு கணக்கு உள்ளது. பிரதிவாதியின் கணவரின் கே.ஆர்.எம்.எஸ் கிரானைட்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தின் வங்கி கணக்கு உள்ள பாரத ஸ்டேட் வங்கி கணக்கு எண் 36709584575 இருந்து எனது கனரா வங்கி கணக்கிற்கு 12.4.2017ல் ரூ. 3 லட்சம் அனுப்பப்பட்டுள்ளது என்றால் எனக்கு தொகை, தேதி சரியாக நியாபகம் இல்லை ஆனால் பணம் அனுப்பியுள்ளார்கள். என்னிடம் காட்டப்படும் பாரத ஸ்டேட் வங்கியின் ஸ்டேட்மெண்ட் ஆப் அகௌண்டின் 4ம் பக்கத்தில் 3ம் வரிசையில் எனது வங்கி கணக்கிற்கு பணம் அனுப்பப்பட்டுள்ளதாக கண்டுள்ளது

என்றால் சரிதான். அந்த ஸ்டேட்மெண்ட் ஆப் அகௌண்ட் பி.வா.சா.ஆ.1. எனக்கும் கே.ஆர்.எம்.எஸ் கிரானைட் கம்பெனிக்கும் இடையே கொடுக்கல் வாங்கல் எதுவும் உள்ளதா என்றால் கம்பெனிக்கும் எனக்கும் எதுவும் கொடுக்கல் வாங்கல் கிடையாது. மேற்படி கம்பெனி கணக்கில் இருந்து எனது கணக்கிற்கு ரூ. 3 லட்சம் வருவதற்கு காரணம் என்ன என்றால் மகேஸ்வரி வாங்கிய கடனுக்காக மேற்சொன்ன தொகை எனக்கு அனுப்பப்பட்டது. இந்த வழக்கு கடனானது 6.1.2021 ல் வாங்கப்பட்டது என்றால் சரிதான். ஆனால் மேற்சொன்ன பி.வா.சா.ஆ.1 ல் 12.4.2017லேயே ரூ. 3 லட்சம் எனது கணக்கிற்கு மகேஸ்வரி அனுப்பியதாக சொல்வதில் இருந்தே மேற்சொன்ன இந்த வழக்கின் கடனானது பொய் என நிருபணமாகிறது என்றால் சரியல்ல. ஏனென்றால், மேற்சொன்ன கடன் இந்த வழக்கு கடன் சம்மந்தப்பட்டது அல்ல. அதற்கு முன்பே மகேஸ்வரி என்னிடம் வாங்கிய கடன் சம்மந்தப்பட்டது ஆகும். பி.வா.சா.ஆ.1ல் என் கணக்கிற்கு வந்த பணம் கே.ஆர்.எம்.எஸ் நிறுவனத்தில் இருந்து வந்தது என்றும், அது மகேஸ்வரியால் அனுப்பப்படவில்லை என்றும், ஆகவே பி.வா.சா.ஆ.1 பரிவர்த்தனை எனக்கும் மகேஸ்வரிக்கும் இடையேயானது அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கின் கடன் தவிர வேறு எந்த கடன் பரிவர்த்தனைகளும் எனக்கும் மகேஸ்வரிக்கும் ஏற்பட்டதாக என்னுடைய வழக்குரையிலோ, நிருபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 கடன் பரிவர்த்தனையானது எனது அண்ணன் புகழுக்கும், பிரதிவாதியின் கணவர் ரமேஷுக்கும் இடையேயான கடன் பரிவர்த்தனை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 நான் இந்தியன் வங்கியில் வீடு கட்டுவதற்காக வாங்கிய கடனுக்கான சொத்து ஒப்படைப்பு ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.2ல் சொத்து பட்டியல் விவரத்தில் சொல்லப்பட்டுள்ள சொத்தானது எனக்கு சொந்தமான கீழ்நாச்சிப்பட்டு கிராமத்தில் மனக்குள விநாயகர் நகரில் உள்ள மனை எண் 25, 1040 சதுரடி மனை என்றால் சரிதான். ஷெட்யூல் ஏ ஆவணங்கள் ஒப்படைப்பு விவரத்தில் 11வது வரிசையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணமானது மெலே சொன்ன என்னுடைய 1040 சதுரடி மனையில் வீடு கட்டுவதற்கான அங்கிகரிக்கப்பட்ட கட்டிட வரைபடம் என்றால் சரிதான். சொத்து விவரத்தில் கண்டுள்ள மனையில் வீடு கட்டுவதற்காகத்தான் நான் மேற்சொன்ன கடனை வாங்கினேன் என்றால் சரிதான். அந்த மனையில் வீடு கட்டப்பட்டதா என்றால் கட்டப்பட்டது. வா.சா.ஆ.4 விற்பனை ஆவணம் என்றால் சரிதான். எந்த சொத்தை விற்பதற்கான விற்பனை ஆவணம் என்று கேட்டால் நான்

எந்த வீடு கட்டுவதற்காக லோன் வாங்கினேனோ அந்த வீட்டை விற்றதற்கான விற்பனை ஆவணம் ஆகும். வா.சா.ஆ.4ல் 6ம் பக்கத்தில் கிழக்கு மேற்கு ஜாதியடி இருபுறமும் 40 வடக்கு தெற்கு ஜாதியடி இருபுறமும் 26 ஆக மொத்தம் 1040 சதுரடி 96.61 சதுர மீட்டர் அளவுள்ள காலிமனையை தங்களுக்கு கிரையம் கொடுத்து விட்டேன். இதில் கட்டிடம் எதுவும் இல்லை என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 என்னால் படித்துப் பார்த்து முழு சம்மதத்துடன் கையொப்பம் இட்டு எழுதி கொடுக்கப்பட்டது ஆகும். ஆனால் அந்த இடத்தில் கட்டிடம் இருந்தது. வா.சா.ஆ.4ல் பரந்தாமன் மற்றும் புகழ் ஆகிய இருவர் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள். வா.சா.ஆ.4ல் கையொப்பம் இட்டது எனது கணவரும், அண்ணனும் ஆவார்கள் என்றால் சரிதான். அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தும் நோக்கில் அந்த ஆவணம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி சொத்தை நான் ரூ. 2,14,000 க்கு விற்றுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4ல் பக்கம் 2ல் 5வது வரியில் சொத்தை ரூ. 2,14,000 க்கு என்னுடைய குடும்ப அவசர செலவிற்காகவும், சில்லறை கடன்களை பைசல் செய்வதற்காகவும், விற்றதாக கண்டுள்ளது என்றால் சரிதான். மேலும் ரூ.2,14,000/- எனது வங்கி கணக்கு மூலமாக பெறப்பட்டது என கண்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு கடன் கொடுக்கப்பட்டதாக சொல்லும் தேதியில் நான் என்னுடைய கடனை அடைப்பதற்காக எனது சொத்தை விற்கின்ற சூழ்நிலையில் இருந்தேன் என்றும், அதனால் இந்த கடன் தொகை கொடுப்பதற்கான போதிய மூலாதாரம் என்னிடம் இருக்க வாய்ப்பே இல்லை என்றால் சரியல்ல. ( வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.